**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 160/மா/2022**

**நாள் : 01.11.2022**

| | | |
|---|---|---|
| திரு.R. மயில்சாமி,<br>மதுரை. | – | முறையீட்டு மனுதாரர் |
| உதவி ஆணையர், மண்டலம்–01,<br>மதுரை மாநகராட்சி, மதுரை | – | எதிர்மனுதாரர் |

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5–ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 19.09.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.09.2022-ல் பெறப்பட்டு 160/மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5–ல் வசிக்கும் திரு.R. மயில்சாமி என்பவர் தனது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

" மதுரை மாநகராட்சி வார்டு எண் 14, மண்டலம் –1 (கிழக்கு) கே.புதூர், சர்வேயர் காலனியில் 80 முதல் 90 அடி அகலம் கொண்ட ஓடை உள்ளது. இந்த ஓடை தவசி புதூர், யாதவர் கல்லூரி, சர்வேயர் காலனி வழியாக பெரியார்(வைகை) ஆற்றில் கலக்கிறது. இந்த பெரிய ஓடையை

சர்வேயர் காலனியில் உள்ள தேவதாஸ் மருத்துவமனை நிர்வாகமும், மற்றும் வசந்தவிகநாதன் ஹால் நிர்வாகத்தினரும் பங்கு போட்டு ஓடையை வழிமறித்து ஆக்கிரமிப்பு செய்து இரண்டு நிர்வாகத்தினரும் கட்டிடம் கட்டியுள்ளார்கள். 80 முதல் 90 அடி அகல ஓடை தற்போது 10 முதல் 15 அடி அகலம் தான் இரண்டு கட்டிடத்திற்கு நடுவில் உள்ளது என்றும், மேலும் பெரிய ஓடையை ஆக்கிரமிப்பு செய்து கட்டிய தேவதாஸ் மருத்துவமனை மற்றும் வசந்தவிகநாதன் ஹால் கட்டிடங்களுக்கு மாநகராட்சி அலுவலர்கள் எப்படி அனுமதி கொடுத்தார்கள் என்பது தெரியவில்லை. இதில் அனுமதி வழங்குவதற்கு பல இலட்சம் ரூபாய் கைமாறி இருக்கலாம் என்றும் இந்த மருத்துவமனை, வசந்தவிகநாதன் ஹால், அழகர் கோவில் சாலையில் அமைந்து இருப்பதினால், தினமும் இலட்சம் பேர் இக்கட்டிடங்களை பார்த்து செல்கிறார்கள். கண்கூடாக பெரிய ஓடையை ஆக்கிரமிப்பு செய்து இருக்கும் தேவதாஸ் மருத்துவமனை மற்றும் வசந்த விகநாதன் ஹால் கட்டிடங்கள் சட்டத்துக்கு புறம்பாக ஓடையை ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டடங்களை அகற்றியும், இக்கட்டிடங்களை ஆய்வு செய்யாமல் அனுமதிஅளித்த சம்மந்தப்பட்ட முன்னாள், இந்நாள் மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டி 14.09.2022 தேதியில் பதிவு தபாலில் மதுரை மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் மண்டலம் –1(கிழக்கு) அவர்களுக்கு புகார் மனு அளித்துள்ளேன் என்றும், தமிழ்நாடு அரசு நீர்வழிபாதை ஆக்கிரமிப்புகளை தடுப்பதற்கு பல அரசாணைகள் மற்றும் சட்டங்கள் இயற்றியும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக பல உத்தரவுகள் பிறப்பித்து இருந்தும் மேற்படி இரண்டு நிர்வாகத்தினர்கள் சட்டத்தை மதிக்காமல் கட்டிடத்தை கட்டியுள்ளார்கள். எனவே மேற்படி ஓடையை முழுமையாக அளந்து அத்துமால் காண்பித்து, கல் ஊன்றி, வரைபடம் மற்றும் ‘ அ ‘ பதிவேடு 1950 வருடத்திற்கு முந்தைய ஆவணங்களில் உள்ளபடி அளவீடு செய்து, சட்டத்திற்கு புறம்பாக ஓடையை வழிமறித்து ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள தேவதாஸ் மருத்துவமனை மற்றும் வசந்தவிகநாதன் ஹால், கட்டிட ஆக்கிரமிப்புக்களை முழுமையாக அகற்றிட, மதுரை மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் மண்டலம்–1(கிழக்கு) அவர்களுக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை வேண்டிக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி மதுரை மாநகராட்சி மண்டலம்–01ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ 06.10.2022 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 06.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 11.10.2022 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைக்கப்பட்டனர்.

4) மனுதாரர் 11.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“மதுரை மாநகராட்சி, வார்டு எண்.14, மண்டலம்–1 (கிழக்கு) K-புதூர் சர்வேயர் காலனியில் 80 முதல் 90 அடி அகலம் கொண்ட ஓடை உள்ளது. இந்த ஓடை தவசி புதூர், யாதவர் கல்லூரி, சர்வேயர் காலனி வழியாக வைகையாற்றில் கலக்கிறது. தேவதாஸ் மருத்துவமனை மற்றும் வசந்தவிகநாதன் ஹால் ஆகியவை மேற்கண்ட ஓடையை வழி மறித்து ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டியுள்ளனர். அதன் காரணமாக 80 முதல் 90 அடி அகலம் கொண்ட ஓடை தற்போது 10

முதல் 15 அடி அகலம் மட்டுமே உள்ளது. மேலும் மேற்கண்ட மருத்துவமனை பெறப்பட்ட திட்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளன. இதில் Planning Violation உள்ளது.

எனவே, மேற்படி ஓடையை ஆவணங்களின் படி அளவீடு செய்து சட்டத்திற்கு புறம்பாக நீரோடையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள தேவதாஸ் மருத்துவமனை மற்றும் வசந்தவிகநாதன் ஹால் ஆகிய கட்டிடங்களின் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும் சட்டத்திற்கு புறம்பாக ஓடையை ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டிடங்களை அகற்றியும், இக்கட்டடங்களை ஆய்வு செய்யாமல் அனுமதி அளித்த சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் நடவடிக்கை எடுத்திடவும், ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) 11.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் மதுரை மாநகராட்சியின் உதவி பொறியாளர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு 14 சர்வேயர் காலனி அழகர்கோவில் சாலையில் அமைந்துள்ள தேவதாஸ் மருத்துவமனை மற்றும் விகநாதன் ஹால் ஆகியவை ஓடையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளதாக மனுதாரர் மாநகராட்சியில் மனு அளித்திருந்ததைத் தொடர்ந்து மேற்கண்ட இடத்தை புலத் தணிக்கை செய்திட சம்பந்தப்பட்ட உதவிப் பொறியாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும் மேலும், மேற்கண்ட ஆக்கிரமிப்புக் கட்டங்களுக்கு மாநகராட்சியின் மூலம் நோட்டீஸ் அனுப்பவும், மேற்கண்ட கட்டங்கள் அமைந்துள்ள இடம் பொதுப் பணித்துறைக்கு சொந்தமான நீரோடை என்பதால், பொதுப்பணித்துறையினரின் உதவியுடன் மேற்கண்ட ஆக்கிரமிப்பை அகற்றிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் உதவி ஆணையரின் 10.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) மதுரை மாநகராட்சி உதவி ஆணையர் தனது 10.10.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"திரு R.மயில்சாமி என்பவரின் 14.09.2022 நாளிட்ட மனு மண்டல அலுவலகம் –1ற்கு 16.09.2022 அன்று கிடைக்கப்பெற்றது. மேற்கண்ட மனுவில் சர்வேயர் காலனியில் அழகர்கோவில் சாலையில் தேவதாஸ் மருத்துவமனை இயங்கி வருகிறதென்றும், மேலும் வசந்த விகநாதன் ஹால் என்ற கட்டிடம் உள்ளதென்றும், மேற்படி கட்டிடங்கள் ஓடையில் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளதாகவும், அதனை அகற்ற வேண்டுமென கோரிக்கை வைத்துள்ளார்.

மேற்கண்ட கோரிக்கையின்படி சம்மந்தப்பட்ட உதவிப்பொறியாளருக்கு உரிய நடவடிக்கை எடுக்க 26.09.2022 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. மேற்கண்ட மனுவின் மீது உதவிப்பொறியாளர்

சம்மந்தப்பட்ட நகர அளவையர் உதவியுடன் புலத்தணிக்கை மேற்கொண்டும், நில அளவை செய்து அறிக்கை 03.10.2022 அன்று அளித்துள்ளார். அதில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

மதுரை மாநகராட்சி சர்வே வார்டு XVI, Block-VIII, T.S.No.1/5 மற்றும் 2/5ல் தென்கிழக்கில் 18 மீட்டர், தென்வடல் கிழபுறம் 1.1 மீட்டர் மொத்த பரப்பு 10 மீட்டர், வெளிப்புற சுவர் மட்டும் ஆக்கிரமிப்பு உள்ளது என அறிக்கை அளித்துள்ளார். மேற்கண்ட நீரோடை பொதுப்பணித்துறையினரின் உதவியுடன், மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுமென இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் மதுரை மாநகராட்சி உதவி பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன:

மனுதாரர் மதுரை மாநகராட்சி, வார்டு எண்.14, மண்டலம்–1 (கிழக்கு) K-புதூர் சர்வேயர் காலனியில் 80 முதல் 90 அடி அகலம் கொண்ட ஓடை உள்ளது. இந்த ஓடை தவசி புதூர், யாதவர் கல்லூரி, சர்வேயர் காலனி வழியாக வைகையாற்றில் கலக்கிறது. தேவதாஸ் மருத்துவமனை மற்றும் வசந்தவிகநாதன் ஹால் ஆகியவை மேற்கண்ட ஓடையை வழி மறித்து ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டியுள்ளனர். அதன் காரணமாக 80 முதல் 90 அடி அகலம் கொண்ட ஓடை தற்போது 10 முதல் 15 அடி அகலம் மட்டுமே உள்ளது. மேலும் மேற்கண்ட மருத்துவமனை பெறப்பட்ட திட்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளன. இதில் Planning Violation உள்ளது. எனவே, மேற்படி ஓடையை ஆவணங்களின் படி அளவீடு செய்து சட்டத்திற்கு புறம்பாக நீரோடையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள தேவதாஸ் மருத்துவமனை மற்றும் வசந்தவிகநாதன் ஹால் ஆகிய கட்டிடங்களின் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும் சட்டத்திற்கு புறம்பாக ஓடையை ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டிடங்களை அகற்றியும், இக்கட்டடங்களை ஆய்வு செய்யாமல் அனுமதி அளித்த சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும், கோரியுள்ளார்.

இந்நேர்வு தொடர்பாக உதவிப்பொறியாளர் சம்மந்தப்பட்ட நகரஅளவையர் உதவியுடன் புலத்தணிக்கை மேற்கொண்டு மதுரை மாநகராட்சி சர்வே வார்டு XVI, Block-VIII, T.S.No.1/5 மற்றும் 2/5ல் தென்கிழக்கில் 18 மீட்டர், தென்வடல் கிழபுறம் 1.1 மீட்டர் மொத்த பரப்பு 10 மீட்டர், வெளிப்புற சுவர் மட்டும் ஆக்கிரமிப்பு உள்ளது என அறிக்கை அளித்துள்ளார். மேற்படி ஆக்கிரமிப்பினை பொதுப்பணித்துறையினரின் உதவியுடன் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை உதவி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

தமிழ்நாடு அரசு நீர்வழிபாதை ஆக்கிரமிப்புகளை அகற்றிட சட்டங்களை இயற்றியும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக பல உத்தரவுகள் பிறப்பித்து இருந்தும் ஆக்கிரமிப்புகள் இன்னும் அகற்றப்படாமல் இருப்பதால் புகார் மனுக்கள் இம்முறைமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ள ஆக்கிரமிப்புகளை உதவி ஆணையரின் அறிக்கையில் குறிப்பிட்டபடி இந்த ஆக்கிரமிப்பு தொடர்பாக

உதவிப்பொறியாளர் சம்மந்தப்பட்ட நகர அளவையர் உதவியுடன் புலத்தணிக்கை மேற்கொண்டு சட்டத்திற்கு புறம்பாக ஓடையை ஆக்கிரமித்து கட்டடங்கள் கட்டப்பட்டிருந்தால் அந்த ஆக்கிரமிப்புகளை பொதுப்பணித்துறையினரின் உதவியுடன் அகற்ற விரைந்து நடவடிக்கை எடுக்க மண்டலம் –01 உதவி ஆணையர் மதுரை மாநகராட்சி அவர்களை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இதனை துணை ஆணையர், மதுரை மாநகராட்சி அவர்கள் உறுதிப்படுத்த வேண்டும். இவை அனைத்தும் ( 3 ) மூன்று மாத காலத்தில் முடிக்கப்பட வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

மேலும் அனுமதியற்ற கட்டடத்தின் மீது மாநகராட்சியால் மேற்கொள்ள வேண்டிய தொடர் நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஆணையர், மதுரை மாநகராட்சி அவர்களை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 01 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு R. மயில்சாமி,
   மனை எண்.5,
   அய்யப்பன்தெரு,
   செம்பருத்தி நகர்,
   புதுவிளாங்குடி, மதுரை–625 018.
2. ஆணையர்,
   மதுரை மாநகராட்சி,
   மதுரை.
3. துணை ஆணையர்,
   மதுரை மாநகராட்சி,
   மதுரை. (He is requested to ensure the implementation of this order)
4. உதவி ஆணையர்,
   மதுரை மாநகராட்சி,
   மதுரை.
5. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

6. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்